JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **61/2017** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | **Gopalakrishnan** | Caste | |
| Father's Name | **Vembusamy** | Calling | |
| Village | **Gangapuram** | Religion | |
| Taluk | **Chithode** | Age | |

**Accused No**. 1 & 2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08 .05.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பைனான்ஸ் வைத்து நடத்தி வருகிறேன் 20.09.2016 ம் தேதி மாலை 3.00 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் இருந்தபோது என்னுடைய உறவினரான விஜயலட்சுமி எனக்கு போன் செய்து நானும் சாமியாத்தாளும் யமஹா ஃபேஷன் பிளஸ் இருசக்கர வாகனத்தில் விஜயலட்சுமி வண்டியை ஓட்ட சாமியாத்தாள் பின்னால் அமர்ந்து காஞ்சி கோவிலுக்கு செல்ல வேண்டி கவுண்டம்பாளையம் வாய்க்கால் பிரிவில் சென்றபோது அதே ரோட்டில் அவர்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் அவர்களை வண்டியுடன் கீழே தள்ளிவிட்டு சாமியாத்தாள் கழுத்தில் இருந்த தங்கதாளி கொடியை பறித்துக் கொண்டு போய் விட்டதாக தகவல் கூறினார்கள்.

2. உடனே நான் விஜயலட்சுமியின் மகள் வினோதினியிடமும்

சாமியாத்தாளின் மகன் சதீஷிடமும் தகவல் கூறி அவர்களையும் அழைத்துக் கொண்டு கவுண்டம்பாளையம் வாய்க்கால் பாலம் அருகே சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது சாமியாத்தாளுக்கு காலிலும், கழுத்திலும், இரண்டு காதிலும், வாயிலும் காயம் ஏற்பட்டிருந்தது. விஜயலட்சுமிக்கு கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது. நாங்கள் சம்பவத்தைப் பற்றி கேட்ட போது பின்னால் வந்த நபர்கள், அவர்கள் இரண்டு பேர்களில், வண்டியை ஓட்டி வந்தவர் ஹெல்மெட் அணியவில்லை என்றும் , அமர்ந்து வந்த நபர் ஹெல்மெட் போட்டிருந்ததால் அவரின் முகம் அடையாளம் தெரியவில்லை என்றும் இருவரும் கூறினார்கள்.

3. அவர்கள் இருவரையும் ஈரோடு 24 கேர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம் . விஜயலட்சுமியை அவரது மகள் வினோதினி சிகிச்சைக்காக அம்மருத்துவமனையில் உள்ள மருத்துவரிடம் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். சாமியாத்தாளை அவரது மகன் சிகிச்சைக்காக அம்மருத்துவமனையில் உள்ள மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். சாமியாத்தளை உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள் .விஜயலட்சுமி சிகிச்சை பெற்றுக் கொண்டு அன்றைய தினமே வீட்டுக்கு போய்விட்டார். என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களையும் நடந்த விபரங்களையும் அவரிடம் கூறினேன் .

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது பொதுமக்கள் சுமார் 10

நபர்கள் இருந்தார்கள். நான் அங்கு சென்றவுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகள் பொய் என்றாலும் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. காயம்பட்ட நபர் எனக்கு வேண்டிய நபர் என்பதாலும் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை